திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் வையம்பட்டி ஒன்றியத்தில் மணப்பாறை திண்டுக்கல் சாலையில் சுங்கச்சாவடி அருகே பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடி மரத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கழகக் கொடியேற்றி வைத்து விழாப் பேருரை ஆற்றினார். இந்நிகழ்வில் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாவட்டகழக மாநில நிர்வாகிகள், கவிஞர் சல்மா, கோவிந்தராஜ், குணசேகரன், வையம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் குணசீலன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி, செல்வராஜ், பழனியாண்டி, சின்ன அடைக்கன், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகர கழகத்தின் சார்பில் 57வது வட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களுக்கு நல உதவிகள் வழங்கினார். நிகழ்வில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர் க.லட்சுமணக்குமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

உலக சுற்றுலா தலத்திற்கு இணையாக

பூம்புகார் சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் பணி!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, ஜூன் 24 - மயிலாடுதுறை மாவட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பூம்புகார் சுற்றுலா தலம் உலக சுற்றுலா தளத்திற்கு இணையாக ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி தரங்கம்பாடி, டேனிஷ் கோட்டை ஆளுநர் மாளிகை, அருங்காட்சியகம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் மிக விரைவில் புனரமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் பூம்புகாரில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் பூம்புகார் சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் பணி, தரங்கம்பாடி வட்டம், தரங்கம்பாடி டேனிக்ஷ் கோட்டை சுற்றுலாத் துறை சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி தொல்லியல் துறை மூலம் ஆளுநர் மாளிகை ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி, அருங்காட்சியகம் ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தும் பணி என மொத்தம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் மிக விரைவில் மேம்படுத்தும்; பணிகள் தொடங்கப்படவுள்ளதை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப் பின் திருக்கடையூரில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளருக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மயிலாடுதுறையில் சுற்றுலாத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் ஆய்வு செய்தோம். தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை 1620-ல் கட்டப்பட்டது. கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் சுற்றுலாத்துறை மானிய கோரிக்கையின் போது டேனிஷ் கோட்டையை புதுப்பிக்க ரூ.3 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பணிகள் இந்த வாரம் துவங்கப்படும்.

டேனிஷ் கோட்டை பொதுமக்கள் பார்ப்பதற்காக மிக சிறப்பாக புனரமைக்கப்படும். அதேபோல பூம்புகாரில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் உலக சுற்றுலாத் தலத்திற்கு இணையாக பூம்புகார் சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஆறு மாதங்களில் நிறைவடையும். இது முதற் கட்ட பணியாகும். இரண்டாவது கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேம்பாட்டுப் பணி நடைபெறும். பூம்புகார் சுற்றுலா மையம் முத்தமிழறிஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 2022-ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் 6 லட்சத்து 60 ஆயிரம் பயணிகள் வருகை தந்துள்ளனர். 2023-ஆம் ஆண்டு கடந்த 4 மாதங்களில் 9 லட்சத்து 71 ஆயிரம் நபர்கள் வருகை தந்துள்ளனர். தமிழகத்திற்கு தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. திருக்கடையூர் தமிழ்நாடு ஹோட்டல் தரம் உயர்த்தப்படும். தரங்கம்பாடி தமிழ்நாடு ஹோட்டல் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றப்பின் மறுசீரமைக் கும் பணி நடைபெற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி அனைத்துத் துறைகளும் சிறந்து விளங்குவதுபோல சுற்றுலாத் துறை முதன்மையாக சிறந்து விளங்கும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. உ. அர்ச்சனா, மாவட்ட சுற்றுலா இயக்குநர் அரவிந்த் குமார், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் திருமதி. சுகுண சங்கரி மற்றும் பலர் உடனிருந்தனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. கழகக் கொடியேற்றினார்!

திருச்சி, ஜூன் 24 - திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் வையம்பட்டி ஒன்றியத்தில் மணப்பாறை திண்டுக்கல் சாலையில் சுங்கச்சாவடி அருகே பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடி மரத்தில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கழகக் கொடியேற்றி வைத்து விழாப் பேருரை ஆற்றினார் .

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வையும் மேம்படுத்திட கலைஞர் எண்ணற்ற திட்டங்களை தீட்டினார். குடிசை மாற்று வாரியம், கண்ணொளி திட்டம் இப்படி எண்ணற்ற திட்டங்களை தந்தவர் தான் மறைந்த முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆனால் கொள்கையோடு இருக்கும் தி.மு.க வை சீண்டிப்பார்க்கிறார்கள், அழிக்க நினைக்கிறார்கள். ஆனால் எவ்வளவு சீண்டிப்பார்த்தாலும் தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது என்று பேசினார்.

இந்நிகழ்வில் வரவேற்புரை வையம்பட்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ராஜேந்திரன் நன்றியுரை வையம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஸ்ரீரங்கன் ஆகியோர் ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, மாநகரக் கழக செயலாளர் மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாவட்டக் கழக மாநில நிர்வாகிகள் கவிஞர் சல்மா, கோவிந்தராஜ், குணசேகரன், வையம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் குணசீலன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி, செல்வராஜ், பழனியாண்டி, சின்ன அடைக்கன், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

வேலூர் - திருவண்ணாமலை மண்டலங்களில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில்

திருக்கோயில்களின் திருப்பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை!

சென்னை, ஜூன் 24 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன் தினம் (22.06.2023) வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மண்டலங்களை சேர்ந்த வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவள்ளூர்,திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில் களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துக்கனை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் மூலம் கிடைக்கபெறும் வருவாயை பெருக்குதல் போன்ற பணிகளை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில் மாதந்தோறும் தலைமையிடத்தில் இணை ஆணையர்கள் அளவிலான சீராய்வுக் கூட்டமும், மண்டல அளவில் உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களின் சீராய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நேற்று முன்தினம் (22.06.2023) வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தலைமையில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மண்டல அளவிலான சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2021 - 2022 மற்றும் 2022 - 2023 சட்டமன்ற அறிவிப்புகளின் படி நடைபெற்று வரும் பணிகள், உபயதாரர் நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், திருக்குளங்கள் சீரமைப்பு, திருத்தேர் புனரமைப்பு, பெருந்திட்ட வளாக பணிகள், 1,000 ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புனரமைத்தல், திருக்கோயில் நந்தவனங்களை பராமரித்தல், திருக்கோயில் யானைகள் பராமரிப்பு, அன்னதானத் திட்டம், பசுக்கள் காப்பகம் பராமரிப்பு, உலோக திருமேனி பாதுகாப்பு மையம் கட்டுமானப் பணிகள், திருத்தேர் கொட்டகை அமைத்தல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணிகள், திருக்கோயிலுக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கான வாடகை வசூல், சூரிய மின் விளக்குகள் பொருத்துதல், இடிதாங்கி அமைத்தல், அஞ்சல் வழி பிரசாதம் அனுப்புதல், ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்கள், மருத்துவ மையங்கள், நூலகங்கள், பணியாளர்களின் நலன் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. நிறைவாக அமைச்சர் அவர்கள் சட்டமன்ற அறிவிப்புகளின் படி நிறை வேற்றப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் தங்களது நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி அமுலு விஜயன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள், தலைமைப் பொறியாளர் சி. இசையரசன், வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் க.இராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர்/ தனி அலுவலர்(ஆலய நிலங்கள்) டி.குமரேசன், வேலூர் மண்டல இணை ஆணையர் திருமதி கே. ரமணி, திருவண்ணா மலை மண்டல இணை ஆணையர் அர.சுதர்சன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர்கள் அசோகன் (வேலூர்), ஜெ.லஷ்மணன் (இராணிபேட்டை), உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுடெல்லியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தகவல்!

புதுடெல்லி, ஜூன் 24 - தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்த நாளையொட்டி நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி புதுடெல்லியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா 23, 24, 25 ஆகிய நாட்களில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. அதன்படி 23.06.2023 அன்று மோதி பாக் டெல்லி தமிழ் கல்விக் பள்ளியில் கழக

1. கலைஞரும் - கலையும்
2.கலைஞரும்- ஆட்சியும்
3. கலைஞரும் சமூக நீதியும் என்ற தலைப்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கிடையே பேச்சுப் போட்டி நடைபெற்றது.

இன்று (24.06.2023) காலை 10.00 மணிக்கு ஆர். கே.புரம் செக்டர் IV, இல் உள்ள டெல்லி தமிழ் கல்விக் கழக பள்ளியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது. டெல்லியில் வாழும் பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இன்று (24.06.2023) மாலை 5 மணிக்கு தில்லி தமிழ்ச் சங்கம், ஆர்.கே. புரம், செக்டர்-IV, வில் உள்ள தில்லி தமிழ்ச் நடைபெறவுள்ள முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு விழாவில் சங்கத்தில் மாபெரும் சிறப்பு நகைச்சுவை சிந்தனை அரங்கம் நடைபெறவுள்ளது. இதில் திராவிட சூரியனின் கதிர்கள் அதிகம் சுட்டது, வடக்கிலா? தெற்கிலா? என்ற தலைப்பில் சென்னை பழனி, அறந்தாங்கி திருமதி நிஷா, திருச்சி திருமதி அன்னலெட்சுமி, கோவை மஞ்சுநாதன் மற்றும் கலைமாமணி நாகை நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

25.06.2023 அன்று மாலை 5 மணிக்கு ஆர். கே.புரம், செக்டர்-v,வில் உள்ள தில்லி தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர். எஸ்.பாரதி பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றி ஆற்றவுள்ளார்.

அதனை தொடர்ந்து ஐ.லியோனி, தலைவர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. இதில் சமூக நீதியை காக்கும் திராவிட மாடல் ஆட்சியில் பெரிதும் வழிகாட்டுவது "கலைஞரின் ஆட்சி பணியே" என்ற தலைப்பில் கவிஞர் இனியவன் அவர்களும் "கலைபணியே" என்கின்ற தலைப்பில் பேராசிரியர் விஜயகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

எனவே முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில்

சட்டமன்ற உறுதிமொழிக் குழு - அரசு திட்டப் பணிகள் ஆய்வு!

சிவகங்கை, ஜூன் 24 - தமிழ்நாடு அரசு சட்டமன்ற உறுதிமொழிக் குழுதலைவர் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் தலைமையில் நேற்று முன்தினம் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்கள். இவர்கள் சிவகங்கை நகர் பஸ் நிலையத்தில் ருபாய் 1கோடியே 95லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டுவரும் விரிவாக்கப்பணிகளை ஆய்வு செய்தார்கள். கடைகளை தரமாகவும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் கட்டுமாறு உத்திரவிட்டார்கள். அரசு மருத்துவக் கல்லூரியில் பிரசவ வார்டு நோயாளிகள் பிரிவு ஆகியவற்றை பார்வையிட் டார்கள்.அங்கு கழிவுநீர் தேங்குவதை பார்வையிட்டு உடனடியாக வெளியேற்ற ஆலோசனை கூறினார்கள். நகராட்சி சார்பில் ருபாய் 35லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டகுண்டு ஊரணியை பார்வையிட்டு அங்கு குப்பைகள் தேங்காதவாறு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கூறினார்கள்.

மாநிலத்திலேயே சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரியில் ஆண்டிற்கு 5000பேர்களுக்கு பிரசவம் பார்த்து முதலிடம் பெற்றதற்காக குழுவினர் பாராட்டினார்கள். பிரசவவார்டை தனியார் மருத்துவமனைக்கு ஈடாக சுத்தமான முறையில் பராமரித்து வருவதற்காக பாராட்டினார்கள். மன்னர் அரசு கலைக் கல்லூரிமாணவ - மாணவிகளுடன்நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் மாணவர் களின் தேவைகளை கேட்டார்கள். கீழடி அருங்காட்சிய கத்தில்நடைபெற்று வரும்பணிகளை பார்வையிட் டார்கள். அங்கு நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும் தரமாகவும் கட்டுமாறு உத்தரவிட்டார்கள் .

பின்னர் மாலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கலெக்டர்திருமதிஆஷாஅஜித் தலைமையில் மாவட்ட அளவிலான அதிகாரிகள் கூட்டம் அரசு உறுதிமொழி குழு தலைவர் வேல்முருகன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எம்.எல்.ஏக்கள் அண்ணாதுரை, அருள், கருணாநிதி, இராமலிங்கம், ரூபி. மனோகரன், வில்வ நாதன், எஸ். மாங்குடி, திருமதி தமிழரசி ரவிக்குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கை மாறன், சிவகங்கை நகர்மன்றத்தலைவர் சி.எம்.துரை ஆனந்த், ஒன்றியக் குழு தலைவர் திருமதி மஞ்சுளா உட்பட மாவட்ட அளவிலான அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் 248 உறுதிமொழிகளில் நிறைவேற வேண்டி யது குறித்து விவாதிக்கப் பட்டது. திட்டங்களை விரைவாகவும் மக்களுக்கு பயன்படும் வகையில் உரிய காலத்தில் முடித்திடு மாறுகுழுதலைவர் தி.வேல்முருகன் ஆலோசனை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் சட்டசபை துணை செயலாளர் சீனிவாசன், இணைச்செயலாளர் மு.கருணாநிதி, துணைச் செயலாளர் ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள். முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலர் ப.மணிவண்ணன் வரவேற்புப் பேசினார். திட்ட இயக்குனர் சிவராமன் நன்றி கூறினார்.

இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.கழக இளைஞரணி, ஒன்றிய, நகர, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் அளிக்கப்படுகிறது

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் - கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இப்பொறுப்பிற்கு விண்ணப்பிப்பவர்கள் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் பெற்று அதை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் வருகிற 28.06.2023 புதன் கிழமை அன்று மாலைக்குள் மாவட்டக் கழக அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்பிற்கு வர விரும்பினால் அவர்களும் இணைக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாகவும், முழுமையாகவும் நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் ஆர்.காந்தி
செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் அரசின் திட்ட பணிகளை தமிழ்நாடு சட்டப்பேரவை மதிப்பீட்டு குழுவின் தலைவர் சாக்கோட்டை க.அன்பழகன், மற்றும் நிர்வாகிகள் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மதிப்பீட்டு குழுவினர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன், உட்பட அரசு அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரிதிநிதிகள் கலந்து கொண்டனர்.